பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 08 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

தலைப்புச் செய்திகள் -

1. இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அடுத்த கட்ட நிதியை விடுவிக்க தாமதமாவதற்கு தமிழக அரசே காரணம் என மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.
3. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப்பண்ணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.
4. மாநில அரசின் காலை உணவு திட்டத்தில் 22 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
5. தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் திரு அன்வர் பின் இப்ராஹிம் புதுதில்லியில் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து பேச்சு நடத்தினார்.

உயர்நிலைக்குழு அளவிலான பேச்சுவார்த்தைக்குப் பின் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்புக்கு மேலும் கூடுதல் வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பில் புதிய உத்வேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செமி கண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று திரு நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய மலேசிய பிரதமர் திரு அன்வர் பின் இப்ராஹிம், இரு நாடுகளும் வளமான வரலாறு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான முதலீடு தற்போது ஐந்து மில்லியன் டாலரை எட்டியுள்ளது என்றும், இது மேலும் அதிகரிக்கும் என்றும் கூறினார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, பாரம்பரிய மருத்துவ முறைகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், கலாச்சாரம், சுற்றுலா, விளையாட்டு, நிர்வாக சீர்திருத்தம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்புக்கும் இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

**[]<<<>>>[]**

மத்திய அரசு துறைகளில் நேரடி நியமனங்கள் மூலம் அதிகாரிகளை நியமிக்கும் அறிவிக்கையை ரத்து செய்யுமாறு மத்திய பணியாளர்

தேர்வாணையத்துக்கு, மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அந்த ஆணையத்துக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இந்த நேரடி நியமன முறையில் இடஒதுக்கீட்டு கொள்கை கடைபிடிக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

2013-ஆம் ஆண்டு முந்தைய அரசால் பரிந்துரைக்கப்பட்ட இந்த நடைமுறையில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

சமூக நீதியை நிலைநிறுத்துவது மிக முக்கியமானது என்றும், இதில் பிரதமர் திரு நரேந்திரமோடி உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய சமூகங்களை சேர்ந்தவர்கள் அரசு பணிகளில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இந்த நேரடி நியமன நடைமுறையை ரத்து செய்யுமாறு அந்த கடிதத்தில் திரு ஜிதேந்திரசிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அடுத்த கட்ட நிதி வழங்க தாமதமாவதற்கு தமிழக அரசே காரணம் என மத்திய தகவல்

ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மெட்ரோ பணிகள் தொடர்பான நிதி பயன்பாட்டு அறிக்கை உள்ளிட்டவற்றை மாநில அரசு முறையாக வழங்கவில்லை என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் - 1) --30--- செகண்ட்*

முன்னதாக தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் - 2 ) -60--- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விதைப்பண்ணைகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், திருநெல்வேலி மாவட்டம அருவிக்கரை, விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் ஆகிய இடங்களில் 112

கோடி ரூபாய் மதிப்பில இவை அமைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறார்.,

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மைய கட்டிடத்தையும் திரு மு க ஸ்டாலின் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

மாநில அரசின் காலை உணவு திட்டத்தில் 22 லட்சம் குழந்தைகள் பயனடைந்து வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் உள்ளிட்ட இடங்களில் உள்ள அரசு பள்ளிகளில் இன்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பள்ளிகளின் பாதுகாப்பு, சுகாதாரம் உள்ளிட்டவை குறித்து மேலாண்மைக் குழுவில் விவாதிக்க அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.,

கடந்த மூன்று ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறையில் 67 புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டள்ளதாக திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

**[]<<<>>>[]**

முல்லைப் பெரியாறு அணைக்கு அருகே புதிய அணைக்கட்டும் முயற்சியை கேரள அரசு கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு கே பாலகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

விருதுநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அந்த அணை உறுதியுடன் இருப்பதாக பல்வேறு ஆய்வுகளுக்குப் பின் உச்சநீதிமன்றமே கூறியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இதை கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனும் ஒப்புக் கொண்டுள்ள நிலையில், புதிய அணை தேவையற்றது என்று திரு பாலகிஷ்ணன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை மாநில அரசு தொடங்க வேண்டுமென்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாலை கேட்டுக் கொண்டுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே செய்தியாளர்களிடம் பேசிய அவர், அத்திக்கடவு - அவிநாசி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது விவசாயிகளுக்கு கிடைத்த வெற்றி என்று கூறினார்.

மக்களின் நீண்டகால கோரிக்கையான ஆனைமலை - நல்லாறு திட்டம், பாண்டியாறு – புன்னம்புழா திட்டத்தையும் செயல்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு அண்ணாமலை கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசின் பாரம்பரிய விவசாய திட்டம் தொடர்பான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் இன்று திருவண்ணாமலையில் நடைபெற்றது.

இதில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையிலா திட்டங்கள் குறிதது விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்டைட் - ரவிச்சந்திரன் ) ---30 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்,

நீலகிரி முதல் கன்னியாகுமரி வரை உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 30 செகண்ட்*

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ஓரிக்கையில் செயல்பட்டு வரும் ஜரிகை ஆலையை சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் முதற்கட்டமாக நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் 95 சதவீத மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி உமா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தஞ்சை மாவட்டத்தில் உள்ள காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் உள்ளிட்ட ஆறுகளில் தண்ணீர் முழு அளவு செல்வதால் ஆற்றின் கரையோரப் பகுதிகளுக்கு யாரும் செல்ல வேண்டாம் என ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம் அறிவுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

திருப்பூர் மற்றும் தஞ்சாவூரில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் திரு கிறிஸ்துராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லியில் உள்ள பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்று முதல் நான்கு நாட்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான இலவச ஆன்லைன் பேருந்து பயண அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் திருமதி அருணா இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக திற்பரப்பு அருவியில் அதிக அளவு நீர் கொட்டுவதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.